# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109493

1. District : திருச்சி
மாவட்டம்
PS: ஊ.த.க.பிரிவு
காவல்நிலையம்
Year: 2023
ஆண்டு
FIR No.: 01
மு.த.அ. எண்
Date: 03.01.2023
நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption — Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Act 1988 (as amended in — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: 2018). — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from : 30.12.2022
நாள் முதல்
Date to : 13.00 Hrs
நாள் வரை
Time Period :
நேர அளவு
Time from :
நேரம் முதல்
Time to :
நேரம் வரை
(b) Information Received at PS. Date :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03.01.2023
Time : 07.15 Hrs
நேரம்
(c) General Diary Reference : Entry No(s)
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time :
நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கம்ப்யூட்டரில் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 63 கி.மீ வட மேற்கு.
Beat Number : -
முறைக் காவல் எண்
(b) Address : -
முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : - District : -
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : R. செல்லத்துரை
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : ராமையா
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth :
நாள் / பிறந்த ஆண்டு 09.04.1996
(d) Nationality :
நாட்டினம் இந்தியன்
(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue :
வழங்கப்பட்ட நாள்
Place of Issue :
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation :
தொழில் தனியார் நிறுவன பணியாளர்
(g) Address : நெசவாளர் காலனி, தேவானூர் புதூர், துறையூர் வட்டம், திருச்சி மாவட்டம்.
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. மணிவாசகம், கிராம நிர்வாக அலுவலர், தேவானூர் கிராமம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- தாமதமில்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed …………………… Rank …………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி …………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R. Selladurai

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

15. Date & Time of despatch to the court: 3.1.2023
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

G. [signature] 3.1.2023
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
(G. SAKTHIVEL)
Inspector of Police
V3 AC
Name: பெயர் …………………………
Rank: நிலை Insp. No. எண் ………

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**

**திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.01/2023—ன் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண் 12—ன் தொடர்ச்சி...**

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று **(03.01.2023)** காலை **07.15** மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், தேவானூர் புதூர், நெசவாளர் காலனியைச் சேர்ந்த ராமையா மகன் திரு.செல்லதுரை என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநாகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், தேவானூர் புதூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரியும் திரு.விஸ்வநாத் மற்றும் புகார்தாரர் திரு.செல்லதுரை ஆகியோரின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்யப்பட்டது. இன்று **03.01.2023** காலை **08.30** மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.**01/2023** சட்டப்பிரிவு **7(a)** ஊழல் தடுப்பு சட்டம் **1988**(as amended in 2018)—ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புனர் R.செல்லதுரை, வயது **25**, த/பெ.ராமையா, நெசவாளர் காலனி, தேவானூர் புதூர், முசிறி வட்டம், திருச்சி மாவட்டம். பெறுனர் உயர்திரு. காவல்துறை ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திருச்சி மாவட்டம். உயர்திரு அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் எனது தாயார் அமுதா, சகோதரி சுபத்ரா மற்றும் சகோதரன் சுரேந்தர் ஆகியோருடன் வசித்து வருகிறேன். நான் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். நான் பி.டெக் (அக்ரி என்ஜினியரிங்) படித்துள்ளேன். எனது அப்பா ராமையா பெயரில் எங்கள் ஊரான தேவானூர் கிராமத்தில் சர்வே எண்.**125**—ல் சுமார் **1.25** ஏக்கர் புஞ்சை நிலம் உள்ளது. அதனை எனது தகப்பனார் பராமரித்து வந்தார். இந்நிலையில், எனது அப்பா ராமையா கடந்த **14.02.2021** அன்று உடல்நலக்குறைவு காரணமாக இறந்துவிட்டார். எனது அப்பா பெயரில் உள்ள நிலத்தின்பேரில் விவசாயக்கடன் பெறவேண்டியிருந்தது. மேற்படி நிலத்திற்கு பட்டா எனது அப்பா பெயரில் இருந்ததால், வாரிசுகளான எங்கள் நால்வரின் பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்துகொள்ள முடிவு செய்து அதற்கான விண்ணப்பத்தினை ஆன்லைன் மூலம் கடந்த **19.12.2022** அன்று முசிறி வட்டாட்சியருக்கு எனது அம்மா அமுதா பெயரில் விண்ணப்பித்திருந்தேன். நான் விண்ணப்பம் செய்து **10** நாட்களுக்கு மேலானதால் எனது விண்ணப்பத்தின் நிலை என்னவென்று தெரிந்து கொள்ள கடந்த **30.12.22** அன்று மதியம் சுமார் **1** மணியளவில் எங்கள் ஊர் வி.ஏ.ஓ. அலுவலகம் சென்று அங்கிருந்த வி.ஏ.ஓ. விஸ்வநாத் அவர்களை சந்தித்து நான் பட்டா பெயர் மாற்றம் குறித்து விண்ணப்பித்தது பற்றியும், விண்ணப்பித்து **10** நாட்களுக்கு மேலாகியும் எனக்கு எந்த தகவலும் கிடைக்கப் பெறவில்லை என்றும், தற்போது எனது

விண்ணப்பத்தின் நிலைபற்றி கேட்டேன். அதற்கு வி.ஏ.ஒ. விஸ்வநாத் அவர்கள், நீங்க ஆன்லைன்ல அப்ளிகேசன் போட்டுட்டு வீட்லயே இருந்தா, உங்கள நாங்க தேடி வந்தா பட்டா கொடுப்போம், நீங்க இங்க வந்து என்னப் பார்த்தாதானே உங்களுக்கு வேலை நடக்கும் என்று கூறினார். பின் எனது பட்டா பெயர் மாற்றத்திற்கு தேவையான எனது அப்பாவின் இறப்புச் சான்றிதழ் நகல், பழைய பட்டாவின் நகல் மற்றும் தொடர்புடைய ஆவணங்களை கேட்டு வாங்கிக்கொண்டார். அவர் கேட்ட அனைத்து ஆவணங்களையும் கொடுத்துவிட்டு, பட்டா எப்போ கிடைக்கும் சார் என்று கேட்டேன். அதற்கு அவர், டாக்குமெண்ட்ஸ் கொடுத்தா பட்டா உடனே வந்திருமா, நெறைய செலவு இருக்கு, பாத்து செய்யுங்க என்று கேட்டார். நான் அதற்கு, என்ன சார், கவர்மெண்ட் பீசுங்களா என்று கேட்டேன். அதற்கு அவர், என்ன, புரியாத ஆளா இருக்கீங்க, உங்க பட்டா பெயர் மாற்றத்துக்கு எனக்கு நிறைய வேல இருக்கு, ஐயாயிரமாவது கொடுங்க என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம், நானே தனியார் கம்பெனிக்கு வேலைக்கு போய்தான் என் குடும்பத்த கவனிச்சுக்கிறேன், பாத்து கம்மியா கேளுங்க சார் என்று கேட்டேன். அதற்கு வி.ஏ.ஒ. விஸ்வநாத், உங்களுக்காக வேணும்னா ஆயிரம் கொறச்சி, நாலாயிரம் கொடுத்திடுங்க, இதுக்குமேல நம்மாள கம்மி பண்ண முடியாது என்றும், அட்வான்சா பணத்த கொடுத்திங்கன்னாதான் உங்களுக்கு வேல நடக்கும், இல்லன்னா உங்க அப்ளிகேசன் ரிஜக்ட் ஆகிடும் என்று சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை, இருந்தாலும், அப்போதைக்கு அவரிடம், சரிங்க சார் பணம் ரெடி பண்ணிட்டு அடுத்த வாரம் செவ்வாய் அல்லது புதன் கிழமை வாக்கில் வந்து கொடுத்துவிடுகிறேன் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வந்துவிட்டேன். எனது அப்பா பெயரில் உள்ள பட்டாவினை எனது குடும்பத்தாரின் பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்து தர நாலாயிரம் ரூபாய் லஞ்சம் கேட்ட தேவானூர் வி.ஏ.ஒ. திரு.விஸ்வநாத் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd.xxx (R.செல்லதுரை) 03.01.2023. Submitted to the Court of the Hon'ble Special Judge, Special Court for Prevention of Corruption Act 1988, Trichy. Received this report at 07.15 hrs on 03.01.2023 and made preliminary enquiry and registered a case in Trichy V&AC Cr.No.01/2023, u/s 7(a) of the Prevention of Corruption Act 1988(as amended in 2018) at 08.30 hrs on 03.1.2023. Sd.xxx (G.SAKTHIVEL) 3.1.2023 Inspector of Police, Vigilance & Anti-Corruption, Trichy.

G. [signature] 3.1.2023

INSPECTOR OF POLICE
VIGILANCE AND ANTI - CORRUPTION
TRICHYRAPPALLY